**10.10.2024**

**C.C. No. 154/2022**

**எ.சா. 2. உமையாள்**

**குறுக்கு விசாரணை**

**1) என் மகன் பெயர் குமார். மகள் பெயர் மஞ்சுளா. எதிரியின் தாயரும் எனது தாயரும் உடன் பிறந்தவர்கள் எதிரியை பிறந்ததிலிருந்தே தெரியும். எதிரி யார் யாரிடம் கடன் வாங்கினார், கடன் கொடுத்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் எந்த வருடம் மகளிர் சுய உதவி குழுவில் இருந்தேன் என்றால் வருடம் நினைவில்லை. எனது மகள் எதிரியின் காசோலை மற்றும் கடனுறுதிசீட்டுகளை வாங்கி மற்றொருவரிடம் கொடுத்து மோசடி செய்ததாக எதிரி சொல்வது சரியா என்றால் என் மகள் ஒரு நபரிடம் கொடுக்கல் வாங்கல் வைத்திருந்தார். எதிரியின் காசோலை புத்தகம் மற்றும் கடனுறுதிசீட்டையும் வாங்கி வைத்திருந்தார் என்று தெரியும். என் மகள் கொடுக்கல் வாங்கல் வைத்திருந்த நபர் பெயர் தெரியாது. என் மகன் குமார் காசோலை மோசடி வழக்கில் ஒரு வாரத்திற்கு முன்பு நீதிமன்றத்தில் தண்டனை பெற்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் எங்கள் குழு சார்பாக கனரா வங்கிக்கு சென்று கணக்கு தொடங்கினோம். அப்போது வங்கியில் கணக்கு தொடங்குவதற்கு என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள்.**

**2) மகளிர் குழுவில் இருந்த எதிரி, எனது மகள் மஞ்சுளா, மல்லிகா ஆகியோர் வங்கிக்கு சென்று கையொப்பம் செய்து வங்கி கணக்கு தொடங்கினோம். எதிரிக்கும் புகார்தாரருக்கும் உள்ள வரவு செலவு பற்றி எனக்கு தெரியாது. எதிரி கடன் பெற்ற போது என்ன என்ன ஆவணங்கள் கொடுத்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது மகள் மஞ்சுளா, எனது சகோதரியின் மல்லிகா, எனது மகன் குமார் மற்றும் எதிரி ராஜேஸ்லவரி ஆகியோர் புகார்தாரர் மற்றும் பல நபர்களிடம் கடன் வாங்கிவிட்டு மோசடி செய்யும் நபர்கள் என்றால் சரியல்ல. மஞ்சுளாவின் இறப்புக்கும் எதிரி கடன் வாங்கியதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன்**

**என்றால் சரியல்ல. என் மகள் மீது பதியப்பட்ட திருட்டு வழக்கிற்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.**

**சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's)
**விரைவு நீதிபதி காரைக்குடி**